# படகு மாதப்பெயர்கள்

டாக்டர் இரா.கு.ஆல்துரை

## மாதப்பெயர்

கூடலு, ஆலாநி, நல்லாநி, ஆநி, ஆதிரெ, பேராடி, ஆவாநி, பெரட்டாதி, 0தொ0ட்0ட0தீவிகெ, கிரு 0தீவிகெ, தய், எம்மாட்டி என்பன படகு மாதப்பெயர்கள். இப்பெயர்கள் எந்த அடிப்படையில் உருவாகியுள்ளன என்பது பலருக்கும் குழப்பம் தருவதாக உள்ளது. இப்பெயர்கள் மிகப் பழங்காலத்தவை; அண்மைக் காலத்தில் அருகிய வழக்காக இருந்து வருபவை. ஆகையால் இப்பெயர்களுக்கான காரணங்கள் எளிமையாக அறியும் வண்ணம் இல்லை. இவற்றிற்கான பெயர்க்காரணங்களை அறிவது படகர் முன்னோரின் வானநூல் அறிவினைக் காட்டுவதாக இருக்கும்.

**ஓரெ**(ராசி)

ஒவ்வொரு மாதமும் அடையாளம் காணக்கூடிய விண்மீன் தொகுப்பு (a particular constellation visible in every month) ஓரை யாகும். ஓரையை படகுவில் ஓரெ என்று குறிப்பிட்டுள்ளனர். ஓரையைத்தான் பெருவழக்காக ராசி எனக் குறிப்பிடுகின்றனர். இதனை ஆங்கிலத்தில் Signs of the Zodiac என்று குறிப்பிடுகின்றனர்.

தமிழில் ‘ஓரையுநாளுந் துறந்த வொழுக்கம்’ என்று இச்சொல் பழந்தமிழ் இலக்கணமான தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ளது. அந்த அளவிற்கு இது மிகவும் பழைமையான சொல். இச்சொல் கிரேக்கத்தில் ஹோரா என்றுள்ளது.

ஓரைமண்டலம் (ராசிமண்டலம்) 360 டிகிரி கொண்டது. ஓரைகள் பன்னிரண்டு. ஆக ஓர் ஓரையானது 30 டிகிரி கொண்டது. இந்த 360 டிகிரியை 12 பகுதிகளாக அதாவது பன்னிரண்டு மாதங்களுக்கு உரியதாகப் பிரிக்கின்றனர். அந்த வகையில் படகுவில் உள்ள பன்னிரண்டு மாதங்களும் ஒவ்வொரு ஓரைக்கு உரியதாக இருக்க வேண்டும் என்பது வெளிப்படை.

## தமிழ் மாதம்

இப்பொழுது தமிழில் வழக்கத்திலுள்ள சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை, மாசி, பங்குனி என்னும் பன்னிரண்டு மாதப்பெயர்களும் வடசொற்களாக இருக்கின்றன. இவற்றுக்கு மாற்றாகப் பன்னிரண்டு ஓரை (ராசி)ப் பெயர்கள் பண்டைத் தமிழ் நாட்டில் முறையே மேடம், இடபம், இரட்டை, கடகம், ஆளி, கன்னி, துலை, தேள், வில், மகரம், கும்பம், மீனம் என வழங்கி வந்தன என்று குறிப்பிடுகின்றனர். மலையாளத்தில் மாதப்பெயர்கள் ஓரையின் மொழிபெயர்ப்புகளான ராசிப் பெயர்களுடன் வழங்கி வருவது இதற்கு வலு சேர்ப்பதாக இருக்கிறது.

மேலும் இலத்தீன் மொழியிலுள்ள ஓரைப் பெயர்கள் Aries (ram), Taurus (bull), Gemini (twins), Cancer (crab), Leo (lion), Virgo (virgin), Libra (balance), Scorpio (scorpion), Sagittarius (archer

or bow), Capricorn (the goat horned = shark), Aquarius (water bearer = pitcher), Pisces (fish) என்று தமிழின் மொழிபெயர்ப்புகளாக உள்ளன. அவ்வகையில் தமிழ் மாதப்பெயர்கள், அவற்றின் ஓரைப் பெயர்கள் இலத்தீன் மொழியின் பெயர்கள் கீழுள்ளவாறு அமைகின்றன.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | சித்திரை | மேடம் | Aries(ram) | March- April |
| 2 | வைகாசி | இடபம் | Taurus (bull) | April- May |
| 3 | ஆனி | இரட்டை | Gemini (twins) | May- June |
| 4 | ஆடி | கடகம் | Cancer (crab) | June- July |
| 5 | ஆவணி | ஆளி | Leo (lion) | July- August |
| 6 | புரட்டாசி | கன்னி | Virgo (virgin) | August- Sept |
| 7 | ஐப்பசி | துலை | Libra (balance) | Sept- Oct |
| 8 | கார்த்திகை | தேள் | Scorpio (scorpion) | Oct- Nov |
| 9 | மார்கழி | வில் | Sagittarius (archer or bow) | Nov- Dec |
| 10 | தை | மகரம் | Capricorn(goat horned=shark) | Dec- Jan |
| 11 | மாசி | கும்பம் | Aquarius(water bearer=pitcher) | Jan- Feb |
| 12 | பங்குனி | மீனம் | Pisces (fish) | Feb- March |

**ஆநி=அக்கினி**

படகுவில் ஆநி மாதத்தை அ0க்0கிநி என்றும் குறிப்பிடுவது உண்டு. ஏப்பிரல்- மே மாதத்தில் இது வருவதால் அப்பொழுது நீலகிரியின் வெப்பம் உச்சத்தில் இருக்கும். இதைக் கொண்டு வெப்பமான மாதம் ஆநி (ஏப்பிரல்- மே) என்பதை உய்த்துணரலாம். இதற்கு முந்தைய மாதத்தில் வெப்பம் குறைவாக இருப்பதால் நல்லாநி (மார்ச்சு- ஏப்பிரல்) எனப்பெயர் பெற்றுள்ளது. இதற்கும் முந்தைய மாதத்தில் வெப்பம் அளவாக இருப்பதால் ஆலாநி (பிப்ரவரி- மார்ச்சு) எனப்பட்டுள்ளது.

**பேராடி**

ஆஷாட என்பது தமிழில் ஆடி என்றுள்ளது. இதைத்தான் படகுவில் ஆடி அல்லது பேராடி என்று குறிப்பிட்டுள்ளனர்.

**ஆவாநி**

தமிழில் உள்ள ஆவணியைத்தான் படகுவில் ஆவாநி என்று குறித்துள்ளனர்.

**பெரட்டாதி**

அதேபோல் தமிழில் உள்ள புரட்டாசி படகுவில் பெரட்டாதி என்றுள்ளது.

**0கிரு0தீவிகெ**

கார்த்திகை என்பது 0கிரு0தீவிகெ என்று படகுவில் உள்ளது. இம்மாதத்திற்குரிய கார்த்திகை மீனை படகுவில் ஆரல்மீநு என்றும் குறிப்பிடுகின்றனர்.

**நட்சத்திரங்கள்**

அசுவனி, பரணி, கார்த்திகை, உரோகிணி, மிருகசீரிடம், திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயிலியம், மகம், பூரம், உத்திரம், அஸ்தம், சித்திரை, சுவாதி, விசாகம், அனுஷம், கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதையம், பூரட்டாதி, உத்திரட்டாதி, இரேவதி என்பவை இருபத்தேழு நட்சத்திரங்கள். இந்த 27 நட்சத்திரங்களும் 12 ஓரைகளில் அடங்குகின்றன. அவ்வகையில் ஒவ்வொரு ஓரைக்கும் சிறப்பாக உள்ள நட்சத்திரங்கள் என்று 12 குறிப்பிடுகின்றனர்.

படகர்க் காலக்கணக்கில் வரும் மாதங்களும் அவற்றிற்கான விண்மீன்களும் இணையான தமிழ் மாதங்களும்

1.) கூடலு: 10வது விண்மீன் Maagha மகம்- மாசி
2.) ஆலாநி: 12வது விண்மீன் Utra Phalkuni பல்குண- பங்குனி
3.) நல்லாநி: 14வது விண்மீன் Chitraa சைத்ர- சித்திரை
4.) ஆநி: 16வது விண்மீன் Vishaakha வைசாக -வைகாசி
5.) ஆதிரெ: 19வது விண்மீன் Mula மூலம் -ஆனி
6.) பேராடி: 21வது விண்மீன் Uttaraashaada உத்திராடம் -ஆடி
7.) ஆவாநி: 23வது விண்மீன் Dhanishtha அவிட்டம் - ஆவணி
8.) பெரட்டாதி: 25வது விண்மீன் Poorva Bhaadrapada பூரட்டாதி, புரட்டாசி
9.) 0தொ0ட்0ட0தீவிகெ: 1வது விண்மீன் Ashwini அஸ்வினி, ஐப்பசி
10.) கிரு0தீவிகெ: 3வது விண்மீன் Krittika கிருதிகா- கார்த்திகை
11.) தய்: 5வது விண்மீன் Mrigashirsha மிருகசீர்ஷம்-மார்கழி
12.) எம்மாட்டி: 8வது விண்மீன் Pushya பூசம் -தை

**ஆதிரெ**

தமிழ் ஆனி மாதத்திற்குரிய விண்மீன் மூலம். மூலம் என்பதன் மொழிபெயர்ப்பாக ஆதிரெ என்னும் படகு மாதப்பெயர் அமைந்துள்ளது. முந்தியது அதாவது முதலாவது அல்லது மூலமானது என்னும் பொருளில்தான் கோடை மழைக்கு முன்னர் வரும் மழையை ஆதிரெகோடெ என்று அழைக்கின்றனர். அவ்வகையில் மூலம் என்ற பொருளில் ஆதிரெ எனப்பட்டுள்ளது என்பது பொருத்தமாக இருக்கும்.

**கூடலு**

கூடலு ஓரைக்குரிய 10வது நட்சத்திரமான மகம் என்பதன் பொருள் நுகம் என்பதாகும். வளைந்து இருப்பதால் சங்க இலக்கியம் (அகநா. 350) இதனைக் கொடுநுகம் என்று குறிப்பிடுகிறது. இந்தக் கொடுநுகம் என்னும் சொல்தான் படகுவில் கூடலு என்றுள்ளது. கூடலு மாதத்தில்தான் ஏர் மாத்தோ அ0ப்0ப என்ற பண்டிகையை முன்னர் கொண்டாடி இருக்கின்றனர். அதாவது ஓராண்டின் வேளாண்பணிகள் எல்லாம் முடிந்து உழும் ஏருக்குச் சில நாள் ஓய்வளித்துள்ளனர். ஆகையால் கொடுநுகம் (yoke) அதாவது வளைந்த நுகம் படகுவில் கூடலு எனப்பட்டுள்ளது எனக் கொள்ளல் சரியானதாக இருக்கும்.

**0தொ0ட்0ட0தீவிகெ**

0தொ0ட்0ட0தீவிகெ என்பதற்கு இணையாக வரும் மாதம் ஐப்பசி. ஐப்பசி மாதத்து ஆகாயம் தெளிவாக இருக்கும்(Clearness, as of the atmosphere in the month of Aippaci; brightness, as of a lamp, gem, etc.) என்று குறிப்பிடுகின்றனர். அவ்வகையில் வானம் தெளிவாக இருக்கும் மாதத்தினை படகுவில் 0தொ0ட்0ட0தீவிகெ வெளிச்சத்தால் பெற்றது என்னும் வகையில் அப்பெயரிட்டு அழைத்துள்ளனர்.

இனி தய், எம்மாட்டி ஆகிய இரு மாதப்பெயர்களுக்கான காரணங்களை அறிய முடியவில்லை. என்றாலும் மற்ற 10 மாதங்களுக்குரிய பெயர்க்காரணங்கள் அறியப்பட்டுள்ளதால் இவற்றிற்கு இணையான தமிழ் மாதங்களை அடையாளப்படுத்தி விடலாம்.

அவ்வகையில் படகு மாதங்கள், அவற்றிற்கு இணையான தமிழ் மாதங்கள், இலத்தீன் மொழியின் ராசிகள் அவற்றின் ஓரைப் பெயர்கள் கீழுள்ளவாறு அமைகின்றன.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| March/April | 3.நல்லாநி | சித்திரை | Aries (ram) | மேடம் | Chaitraḥ |
| April/May | 4.ஆநி | வைகாசி | Taurus (bull) | இடபம் | Vaiśākhaḥ |
| May/June | 5.ஆதிரெ | ஆனி | Gemini (twins) | இரட்டை | Jyeṣṭhaḥ |
| June/July | 6.பேராடி | ஆடி | Cancer (crab) | கடகம் | Āṣāḍhaḥ |
| July/August | 7.ஆவாநி | ஆவணி | Leo (lion) | ஆளி | Śrāvaṇaḥ |
| August/Septr | 8.பெரட்டாதி | புரட்டாசி | Virgo (virgin) | கன்னி | Bhādrapadaḥ |
| Sept/Octr | 9.0தொ0ட்0ட0தீவிகெ | ஐப்பசி | Libra (balance) | துலை | Āśvinaḥ |
| Oct/Nov | 10.கிரு0தீவிகெ | கார்த்திகை | Scorpio (scorpion) | தேள் | Kārtikaḥ |
| Nov/Decr | 11.தய் | மார்கழி | Sagittarius (archer or bow) | வில் | Mārgaśīrṣaḥ |
| Decr/Jan | 12.எம்மாட்டி | தை | Capricorn (the goat horned = shark | மகரம் | Pauṣaḥ |
| Jan/Feb | 1.கூடலு | மாசி | Aquarius (water bearer = pitcher) | கும்பம் | Māghaḥ |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Feb/March | 2.ஆலாநி | பங்குனி | Pisces (fish) | மீனம் | Phālgunaḥ |